**IN THE COURT OF THE ASSISTANT SESSION JUDGE OF ATTUR**
**SC.No.396/2018**

**Deposition of: P.W.1(LW1)**

**Name : ஈஸ்வரன் Father Name :**

**Village : Taluk :**

**Caste : Religion :**

**Calling : Age :**

**Solemnly affirmed by in accordance with the provision of Act X of 1873 on Date: 28.11.2022 at 3.13 P.m to3.21 P.m.**

<u>முதல் விசாரணை:</u>

**1.** நான் தற்போது சதசிவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர்எதிரிகளை தெரியும். 21.09.2014 அன்று காட்டில் குடியிருக்கும்போது என் மகனுக்கும், ஆஜர்எதிரிகளுக்கும் சண்டை நடந்தது. நான் அன்று இரவு வீட்டில் படுத்து இருந்தேன். என் மகன் லாரிவேலைக்கு போய் வந்திருந்தார். அவர் துாங்கி கொண்டிருந்தபோது எங்களை ஆஜர் எதிரிகள் 7 பேரும் கண்டாரஓலி பையனே , தேவிடா பையலே வெளியே வாடா என திட்டினார்கள். அப்போது என் மகனும், மருமகளும் வெளியே வந்தார்கள்.

2. அப்போது என் மகன் மணிகண்டனை இரும்புகம்பியால் ஜெயமணி என்பர் தலையில் அடித்தார். இடது புற தோள்பட்டையிலும், மணிகட்டிலும், முதுகிலும் ஜெயமணி அடித்தார். அந்த இரும்பு கம்பி தான் சா.பொ.1 ஆகும். நானும் என் மனைவியும் வெளியே வந்து பார்த்தோம் என்னையும் சின்னதம்பி என்பர் சா.பொ.2 யை கொண்டு தலையிலும், இடது கையிலும், மணிகட்டிலும், அல்லஎழும்பு பக்கமும் அடித்து என்னை கீழே தள்ளி அனைத்து எதிரிகளும் என்னை கையாலும், காலாலும் தாக்கினார்கள். என்னை தரதரவென்று இழுத்து கொண்டு போய் அருகில் உள்ள கிணற்றில் தள்ளிவிட்டார்கள்.

3. பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை, என் மகனும், மருமகளும் நான் காப்பாற்றுங்கள் என கத்தியதை கேட்டு ஓடிவந்து தீஅணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தார்கள். அவர்கள் என்னை மீட்டு ஆம்புலன் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**